செய்தி வெளியீடு எண்.548 நாள்.9.7.2008

# தமிழகத்தில் சுற்றுலா பயணிகளுக்கு சலுகைகள் அளிக்கும் புதிய திட்டத்தின்கீழ் பிளாட்டினம் மற்றும் தங்க அட்டைகள் வழங்கும் திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கத்தோடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971 ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்தியாவிலேயே மிக அதிகமாக 55 ஓட்டல்களை தன்னகத்தே கொண்டு சிறப்புடன் செயல்பட்டுவருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் அனைத்தும் "ஓட்டல் தமிழ்நாடு" என்ற பெயரில் தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா மையங்களான மதுரை, தஞ்சாவூர், இராமேஸ்வரம், திருச்செந்தூர், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அனைத்து சுற்றுலாப் பயணிகளும் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் தங்கும் பயணிகளின் எண்ணிக்கை 50 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடுகளாக அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு ஓட்டலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் சலுகைகளுடன் கூடிய "பிளாட்டினம் அட்டை (Platinum Card)" மற்றும் தங்க அட்டை (Gold Card) ஆகியவற்றை தமிழ்நாடு ஓட்டலில் தங்கும் பயணிகளுக்கு அறிமுகம் செய்யும் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்திட தமிழக அரசு முடிவு செய்தது.

பிளாட்டினம் அட்டை 5000 ரூபாய் மதிப்புடையது; இதனை ஒருவர் பத்து ஆண்டுகள் வரை பயன்படுத்த முடியும்; தங்க அட்டை 1000 ரூபாய் மதிப்புடையது. இதனை ஒருவர் மூன்று ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம்.

சுற்றுலா பயணிகள் இந்த அட்டைகளைப் பயன்படுத்தி மலைப்பிரதேசங்களான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா விடுதிகளின் கட்டணத்தில் பருவ காலங்களான ஏப்ரல் முதல் ஜுன் 15 வரை 10 விழுக்காடு தள்ளுபடியும், மற்ற நாட்களில் 20 விழுக்காடு தள்ளுபடியும் பெறமுடியும்.

பருவ காலத்தில் மூன்று நாட்களுக்கு மட்டுமே சலுகை கட்டணத்தில் தங்கும் வசதி அளிக்கப்படும். மற்ற ஓட்டல்களில் ஆண்டு முழுவதும், கட்டணத்தில் 20 விழுக்காடு தள்ளுபடி வழங்கப்படும். மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் உணவு விடுதிகள் மற்றும் படகு இல்லங்களின் கட்டணத்தில் ஆண்டு முழுவதும் 10 விழுக்காடு தள்ளுபடி வழங்கப்படும்.

இத்தகைய சலுகைகள் கொண்ட அட்டைகள் வழங்கும் திட்டத்தினை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்** இன்று (9.7.2008) தொடங்கி வைத்து, முதல் பிளாட்டினம் அட்டையைப் பரதநாட்டியப் புகழ் கலைமாமணி **சோபனா ரமேஷ்** அவர்களுக்கும், முதல் தங்க அட்டையைத் திரைப்பட இயக்குநர் திரு. **எஸ்.பி.முத்துராமன்** அவர்களுக்கும் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., சுற்றுலா வாரியத்தின் தலைவர் திரு சான்வத்ராம், இ.ஆ.ப.(ஓய்வு), சுற்றுலாத் துறை ஆணையர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

***

வெளியீடு: இயக்குநர்,செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.